

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (14.11.2024) சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, பெரம்பூர், ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, குழந்தைகள் தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தகங்கள் வழங்கி, காலை உணவை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், இணை இயக்குநர் (பொது நூலகம்) இளங்கோ சந்திரகுமார், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், செயற்பொறியாளர் செந்தில்நாதன், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.ஸ்ரீதணி, திருமதி.அமுதா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐசிஎப்.முரளி, சந்துரு, பள்ளி தலைமை ஆசிரியை திருமதி.பெல்சியா ஜெபராணி, ஆசிரியர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில், சென்னை மண்டலத்துக்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கடந்த 9–ந் தேதியன்று நடைபெற்றது. இதில் இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் தலைமை தாங்கினார். கூட்டத்துக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபிநேசர், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா ப. பிரகாஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்ட அமைப்பாளர்கள் ராஜா அன்பழகன் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் அன்பகம் செந்தில் அமைப்பாளர்களுக்கும் துணை அமைப்பாளர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் அனைத்து அமைப்பாளர்களும் துணை அமைப்பாளர்களும் தங்களின் கருத்துகளைப் பதிவு செய்தனர். முடிவில் ஆர்.டி.மதன்குமார் நன்றி கூறினார். இதைத் தொடர்ந்து கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரின் பிறந்த நாளை (நவம்பர் 27) 'இளைஞர்களின் எழுச்சி நாளாக' கொண்டாடுவது பற்றியும், கழக வளர்ச்சிப் பணிகள் மற்றும் வரவிருக்கும் 2026 சட்ட மன்றத்தேர்தல் ஆகியவைக் குறித்து விவாதிக்கப்பட்டது.

### சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 7 பள்ளிகளில்

# 741 மாணவர்களுக்கு ரூ.35 லட்சத்தில் இலவச மிதிவண்டிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்புரை!

சிங்கம்புணரி, நவ, 15 - சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஏழு பள்ளிகளில் 741 மாணாக்கர்களுக்கு 35 லட்சம் மதிப்பிலான தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் கலந்துகொண்டு வழங்கினார்.

தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கான ஆட்சியாக ஆட்சி செய்து பள்ளி மாணவர்களுக்கான தனிகவனம் செலுத்தி ஆட்சி செய்து வரும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் பல எண்ணற்ற திட்டங்கள் வகுக்கப்பட்டு சிறப்பாக நடை பெற்று வருகிறது அதன் தொடர்ச்சியாக கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 07 பள்ளிகளைச் சார்ந்த மொத்தம் 741 மாணாக்கர்களுக்கு ரூ.35.70 இலட்சம் மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளி, எஸ்.எஸ் கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி, முறையூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பிரான்மலை அரசு மேல்நிலைப்பள்ளி, கிருங்காக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சிங்கம்புணரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டி களை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித்,தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் கணேசன் பொதுக் குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து ,சோமசுந்தரம்,ஒன்றிய செயலாளர்கள் பூமிநாதன் பால சுப்ரமணியன் நகர செயலாளர் கதிர்வேல் நகர அவை தலைவர் சிவக்குமார் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில்சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணைத் தலைவர் ஆனந்த கிருஷ்ணன் அயலாக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் புகழேந்தி முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் என் எம் சுரேஷ் ஒன்றிய துணை செயலாளர்கள் சிவபுரி சேகர்,முத்துக்குமார், மாவட்டப் பிரதிநிதி கள் செல்வகுமார் ஞானசேகரன் தனுஷ் கோடி,பிரதிநிதி குடோன் மணி உள்ளிட்டார் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளராக கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் கலந்துகொண்டு மாநகரகளுக்கு விலை இல்லா மிதி வண்டி களை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் மாணவர்கள் மத்தியில் பேசும் பொழுது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, தொழில், கல்வி, வேளாண்மை மற்றும் வேலை வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று கடந்த மூன்றரை ஆண்டுகளில் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் 90 சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவது மட்டுமன்றி, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் புதிதாகவும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கல்வியை பொறுத்தே அமைகிறது. எனவே அதனை கருத்தில் கொண்டும், குறிப்பாக எதிர்கால இந்தியாவை வழிநடத்தக் கூடிய சக்தியாக விளங்கி வரும் மாணாக்கர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டும், பள்ளிக்கல்வித்துறைக்கென 40 ஆயிரம் கோடி நிதியும், உயிர்கல்வித்துறைக்கென 07 ஆயிரம் கோடி என மொத்தம் 47 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதுமட்டுமன்றி, வரலாற்றுச் சுவடுகளில் சிவகங்கை மாவட்டம் இடம்பெறுகின்ற வகையில், 2023-2024 ஆம் கல்வியாண்டில் 10-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு தேர்ச்சியில் சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றும், அதே போன்று, 2023-2024 ஆம் கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு தேர்ச்சியில் சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் இரண்டாம் இடத்தை பெற்றும், சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இனி வரும் காலங்களில் முதல் இடத்தை நோக்கி சிவகங்கை மாவட்ட பள்ளிக்கல்வித்துறை பயணிக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ மாணவியர்களுக்கு பயனுள்ள வகையில் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2024-2025 கல்வியாண்டில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் கடந்த ஜூலை மாதம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கிடும் பொருட்டு, மாவட்டத்திலுள்ள 68 அரசு பள்ளிகள் உள்ளிட்ட 105 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில்

மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்று வரும் 4,817 மாணவர்கள் மற்றும் 6,564 மாணவியர்கள் என மொத்தம் 11,381 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில், கடந்த 29.07.2024 அன்று நமது மாவட்டத்தில் விலையில்லா மிதிவண்டிகள் மாணாக்கர்களுக்கு வழங்கி தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள பள்ளிகளில் மாணா க்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்றைய தினம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 59 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 2,89,100/- மதிப்பீட்டிலும், 42 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 1,99,920/- மதிப்பீட்டிலும், எஸ்.எஸ் கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் 27 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 1,32,300/- மதிப்பீட்டிலும், 32 மாணவியர்களுக்குதலாரூபாய்4,760/-வீதம் மொத்தம் ரூபாய் 1,52,320/- மதிப்பீட்டிலும், முறையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 22 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 1,07,800/- மதிப்பீட்டிலும், 22 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 1,04,720 /- மதிப்பீட்டிலும், பிரான்மலை அரசு மேல்நிலைப்பள்ளியில் 45 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 2,20,500/- மதிப்பீட்டிலும், 44 மாணவியர்களுக்கு தலா ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 2,09,440/- மதிப்பீட்டிலும், கிருங்காக் கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் 39 மாண வர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 1,91,100/- மதிப்பீட்டிலும், 23 மாணவியர்களுக்குதலாரூபாய்4,760/-வீதம் மொத்தம் ரூபாய் 1,09,480/- மதிப்பீட்டிலும், சிங்கம்புணரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 119 மாணவர்களுக்கு ரூபாய் 4,900/- வீதம் மொத்தம் ரூபாய் 5,83,100/- மதிப்பீட்டிலும் மற்றும் சிங்கம்புணரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 267 மாணவியர்களுக்கு ரூபாய் 4,760/- வீதம் மொத்தம் ரூபாய் 12,70,920/- மதிப்பீட்டிலும் என 07 பள்ளிகளைச் சார்ந்த மொத்தம் 741 மாணாக்கர்களுக்கு ரூபாய் 35,70,700/- மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகள் இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மிதிவண்டி களை பெறும் மாணாக்கர்கள் பாதுகாப்பான முறையில் சாலை விதிகளை பின்பற்றி, தங்களது பயணங் களை முறையாக மேற்கொள்ள வேண்டும். தங்களின் பெற்றோர்களின் நிலையிலிருந்து, உங்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத்திட்டங்களையும் பெற்று பயனடைந்து வரும் மாணவ, மாணவியர்கள், கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு மற்றும் தனித்திறன்களில் சிறந்து விளங்கி, தங்களது பெற்றோர்களுக்கும், தாங்கள் பயின்ற பள்ளிக்கும், தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்திட வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மேற்கண்ட பள்ளிகளில் 2023-2024ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்க தொகையாக முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.10,000/- மும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.5,000/- மும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000/-மும் மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகையினை கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார். மேலும், மேற்கண்ட பள்ளிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென தலா ரூ.10,000/- வீதம் பள்ளிகளின் புரவலர் நிதியினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், தவத்திரு குருமகா சந்நிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் , கிருங்காக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் அகிலா கண்ணன், ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன் நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், ஒன்றிய இளைஞர் அணி மனோகரன், நகர இளைஞரணிஅருண் பிரசாத், பிரான்மலை மல்லிகா மெடிக்கல் செந்தில் குமார், சிங்கம்புணரி பிரேம்குமார், வரிஞ்சி சரவணன்,பொன் சரவணன், அழகுராஜா, மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகத்தின் முன்னாள் அவைத் தலைவர் எம்.சந்திரனின் மகன் சி.தினகரன் – மகாலட்சுமி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு வாழ்த்தினார். உடன் வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம், மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால், மாவட்ட பிரதிநிதி எம்.செல்வம், மீனவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.என்.கோதண்டன், பி.எஸ்.என்.எல்.குமார், என்.ராஜு, ஏ.வி.முருகன், வி.பாஸ்கர், டி.சுரேஷ், ஆர்.நாராயணன், ஆர்.சி ஜெயக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் கழக தலைவர் – இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வர் ஆணைக்கிணங்க சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்ட பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்ரமணியன் மற்றும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோரது அறிவுறுத்தலின்படி 148வது வட்ட கழக அலுவலகத்தில் வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ்ஏற்பாட்டில் தொகுதி பொறுப்பாளரும் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளருமான பி.டி.பாண்டிச்செல்வம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் வட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. மதுரை மண்டலம் (பதிவு எண். 253/MDU, பேரவை இணைப்பு எண். 288) நிர்வாகிகள் தேர்தல்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. மதுரை மண்டலத்தின் (பதிவு எண் 253/ MDU, பேரவை இணைப்பு எண். 288) நிர்வாகிகள் தேர்தலை நடத்திட தொ.மு.ச. பேரவை இணைப்பொதுச்செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்படுகிறார்கள். மதுரை மண்டலத்தில் உள்ள கிளைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் குறித்த அட்டவணை கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**கிளைச் சங்க நிர்வாகிகள் தேர்தல்**

| | | |
|---|---|---|
| வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (கிளைகள் தோறும்) | - | 21.11.2024 காலை 10.00 மணி |
| இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (கிளைகள் தோறும்) | - | 22.11.2024 மதியம் 2.00 மணி |
| வேட்பு மனு படிவம் வழங்குதல் | - | 22.11.2024மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| வேட்பு மனுத்தாக்கல் | - | 23.11.2024 காலை 8.00 மணி முதல் காலை10.00 மணி வரை |
| வேட்பு மனு பரிசீலனை | - | 23.11.2024 காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை |
| தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | - | 23.11.2024 மதியம் 1.00 மணி |
| வேட்பு மனு திரும்பப் பெறுதல் | - | 23.11.2024 மதியம் 1.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை |
| இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் | - | 23.11.2024 மாலை 4.00 மணி |
| வாக்குப் பதிவு | - | 25.11.2024 அன்று போட்டி உள்ள கிளைகளில் தேர்தல் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

| | | |
|---|---|---|
| வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | - | 26.11.2024 காலை 8.00 மணி |
| வேட்பு மனு படிவம் வழங்குதல் | - | 26.11.2024 காலை 8.00 மணி முதல் காலை 9.00 மணி வரை |
| வேட்பு மனுத்தாக்கல் | - | 26.11.2024 காலை 9.30 மணி முதல் காலை 10.30 மணி வரை |
| வேட்பு மனு பரிசீலனை | - | 26.11.2024 காலை 10.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை |
| தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | | 26.11.2024 மதியம் 12.30 மணி |
| வேட்பு மனு திரும்பப் பெறுதல் | - | 26.11.2024 மதியம் 12.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை |
| இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் | - | 26.11.2024 மதியம் 2.30 மணி |
| போட்டியிருப்பின் வாக்குப் பதிவு | - | 26.11.2024 மாலை 4.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |

கிளைச் சங்கத் தேர்தலுக்கான வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் ஆகியவை **மத்திய சங்க அலுவலகத்தில்** நடைபெறும். கிளைச் சங்கத்திற்கு போட்டி இருந்தால் அந்தந்த கிளைகளின் அருகில் ஒதுக்கப்பட்ட இடத்தில் வாக்குப்பதிவு நடத்தி, வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு உடனே முடிவுகள் அறிவிக்கப்படும்.

மத்திய சங்க தேர்தல் வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவை **மத்திய சங்க அலுவலகத்தில்** நடைபெறும்.

**ஆணையாளரின் முடிவே இறுதியானது.**



தாம்பரம் மாநகராட்சி 44–வது வார்டு இராமகிருஷ்ணாபுரம் கண்ணகி தெருவில் அமைந்துள்ள ஆரம்ப பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்ட ரூபாய் 60 லட்சம் நிதி ஒதுக்கி அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அடிகள் நாட்டி துவக்கி வைத்தார். உடன் மேயர் திருமதி க.வசந்தகுமாரி, 3வது மண்டல குழுத்தலைவர் ச.ஜெயபிரதீப், 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன், பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ் எம்.சி., மாமன்ற உறுப்பினர்கள் இரா ராஜா, சிட்லபாக்கம் ஜெகன், கற்பகம்சுரேஷ், கல்யாணி மணிவேல், பகுதி கழக நிர்வாகிகள் சிட்லபாக்கம் மனோகரன், விஜயபாரதி, இரா.விஜயகுமார், பிரதாப், லட்சுமிபதி ராஜா,ஈவி.சுரேஷ், க.யோகநாதன், ஆர்.கே.புரம் சிவா, ஆர்.கே.புரம் பாரதி, கே.ஆர்.ராமச்சந்திரன், நாவா.சுரேஷ், திவாகர் மற்றும் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவர் மாணவிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.